25 JAN 1972
UNDERGRADUATE LIBRARY

Registered as a NewsPaper in Ceylon [illegible] ★ ☆

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

[illegible] 59
போன் 389

தேசிய தினசரி

மலர் 15
இதழ் 341

[illegible] தை 8 துல்ஹஜ் 5 சனிக்கிழமை (22-1-72)

அருள் விருந்து
''பிரதிபலனை எதிர்பார்க்காதவன் பெருமகன் ஆகிறான்''
- தர்மசக்கரம்.

மில்க்வைற் தயாரிப்புகளை வாங்கி அதிக லாபம் அடையுங்கள்.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை,
த. பெ. இல. 77,
யாழ்ப்பாணம்.

அரசாங்க சேவையிலுள்ள

டாக்டர்களின் இந்தச் சிகிச்சை முறை ரத்து!

ஆளும் கட்சி எம். பி. க்கள் ஏகமனதாகத் தீர்மானம்

முதலில் கொழும்பில் ஆரம்பம்

கொழும்பு, வெள்ளி

அரசாங்க சேவையிலுள்ள வைத்திய நிபுணர்கள் நோயாளிகளுக்கு விசேஷ ஆலோசனைகள் கூறுவதற்கான இப்போதைய நடைமுறை ஒழிக்கப்படவிருக்கிறது,

அரசாங்க வைத்திய நிபுணர்கள் வெளி இடங்களுக்குச் சென்று நோயாளிகளை பரிசோதித்து விசேஷ ஆலோசனை கூறுவதற்கு இப்பொழுது இருந்துவரும் நடைமுறையை ஒழித்து விடுவதென்று இன்று ஆளும் கட்சியின் ஆட்சிமன்றக் குழு ஒருமனதாக முடிவு செய்தது.

அரசாங்க வைத்திய நிபுணர்கள் வெளி இடங்களுக்குச் சென்று நோயாளிகளுக்கு ஆலோசனைகள் வழங்குவதற்கான இப்போதைய முறையினால் பல ஊழல்கள் நடைபெற ஏதுவாகியிருப்பதாகவும் ஆஸ்பத்திரி சேவைகள் சீர்குலைவதற்கு காரணமாகியுள்ளதாகவும் பல உறுப்பினர்கள் கூட்டத்தில் கருத்து வெளியிட்டதாகத் தெரிகின்றது'

நீர்ப்பாசனம், மின்சக்தி நெடுஞ்சாலைகள் அமைச்சர் திரு மைத்திரிபால சேனநாயக்கா கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்' இந்தக் கூட்டத்தில் சுகாதார அமைச்சர் தி. ஆரியதாஸ பேசுகையில் அரசாங்க வைத்தியர்கள் தனிப்பட்ட முறையில் தொழில் நடத்துவதை ஒழிப்பதற்காக தமது அமைச்சு நடவடிக்கை எடுக்கும் என தெரிவித்தார்.

படிப்படியாக அமுல்

அரசாங்க வைத்திய நிபுணர்கள் விசேஷ ஆலோசனை கூறும் முறையை ஒழிக்கும் திட்டம் படிப்படியாக அமுல் நடத்தப்படவிருக்கின்றது. முதலில் இது கொழும்பில் நடைமுறைக்கு வரும். இவ்வருடம் பெப்ரவரி முதலாம் திகதி நடைமுறைக்கு வரும் என்று தெரிகின்றது.

---

11 மாலுமிகளுடன் மறைந்த பாய்மரக் கப்பல்

தேடுதல் முயற்சி தொடர்கிறது

கொழும்பு, வெள்ளி

தற்போது கடலில் மாயமாய் மறைந்திருக்கும் இந்திய பாய்மரக்கப்பலை தேடும் முயற்சியில் இலங்கை இந்திய விமானப்படைகளும் கடற்படைகளும் ஈடுபட்டுள்ளன.

பதினொரு மாலுமிகளைக் கொண்ட இக்கப்பல் புயலினால் அடித்துக்கொண்டு போய் லக்ஷதீவுகளுக்கோ அல்லது மாலைதீவுக்கோ ஒதுக்கப்பட்டிருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தக்கப்பல் லட்சதீவுகளின் கரையிலாவது மாலைதீவு கரையிலாவது ஒதுங்கியிருக்கிறதா என இந்திய அரசாங்கம் தகவல் திரட்ட எடுத்த முயற்சிகள் இதுவரை தோல்வியடைந்திருக்கிறது.

இத்தீவுகளில் இருந்து இதுவரை இந்திய அரசாங்கத்திற்கு இக்கப்பல் பற்றி எவ்வித தகவலும் கிடைக்கவில்லையாம்.

இந்தக்கப்பல் கடலில் மூழ்காமல் இருக்கும் பட்சத்தில் ஆஸ்திரேலியா மலேஷியா பக்கமாக கடலில் அடித்துக்கொண்டு போயிருக்கலாம் என கருதப்படுகிறது.

இதைத் தொடர்ந்து இக்கப்பலை தேடும் முயற்சிக்கு இந்திய அரசாங்கம் சர்வதேச கப்பல்களின் உதவியையும் நாடவிருக்கிறது.

குட்டையானவர்களும் இனி ராணுவத்தில் சேரலாம்

கொழும்பு, வெள்ளி

ஐந்து அடி நான்கு அங்குலத்திற்கு விட கட்டையானவர்கள் கூட இனிமேல் ராணுவத்தில் சேரலாம். ஆனால் அப்படிப்பட்ட "குள்ளர்கள்" சப்பாத்து தைப்பது, தையல்வேலை, வாகனங்கள் ஓட்டுவது போன்ற வேலைகளில் வல்லவர்களாக இருக்கவேண்டுமென ராணுவ தளபதி மேஜர் ஜெனரல் திரு. சேபால ஆட்டிகல அறிவித்துள்ளார்.

இவ்வித வேலைகளில் திறமையான ராணுவ வீரர்களுக்கு இனிமேல் மாதம் ஒன்றுக்கு பத்து ரூபா விசேட அலவன்சு வழங்கப்படும்'

அத்துடன் ராணுவத்தில் சேருவதற்குரிய வயதெல்லையையும் 30 வயதாகவும் ராணுவத்தளபதி உயர்த்தியிருக்கிறார். (நச)

இந்த நாணயங்கள் செல்லுபடியாகும்

கொழும்பு, வெள்ளி

ஆறாவது ஜோர்ஜ் மன்னரின் உருவம் பொறிக்கப்பட்ட 50சத. 25சத நாணயக்குற்றிகள் செல்லுபடியாகும் என மத்திய வங்கி அறிவித்துள்ளது.

50சத, 25சத நிக்கல், பித்தளை நாணயங்களை ஏற்க மறுக்கப்படுவதாக புகார் கிடைத்திருப்பதாகவும், 1943-1951ம் ஆண்டுகளில் மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட 50சத, 25 சத நிக்கல், பித்தளை நாணயங்களில் ஆறாவது ஜோர்ஜ் மன்னரின் உருவம் பதித்திருக்கும் என்றும் இவை சட்டப்படி செல்லுபடியாகும் என்றும் மத்தியவங்கி அறிவித்துள்ளது.

நிதிக்குழு

யாழ்ப்பாணம், சனி

முன்னர் பின்போடப்பட்டிருந்த யாழ் மாநகரசபையின் இவ்வருடத்திற்கான முதலாவது நிதிக்குழுவின் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு கூடுகின்றது.

மேயர் திரு அல்பிரட் துரையப்பா தலைமையிலான இக்குழுவில் என். பி. செல்லத்துரை என். மார்க்கண்டு கே. வி. தெய்வேந்திரம் எஸ். ஜே. அன்ரனி ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். (குடு. நிரு)

'போதிய சீவல் தொழிலாளர் வடக்கில் இருக்கின்றனர்'

யாழ்ப்பாணம், சனி

'சீவல்தொழிலாளர்களை இந்தியாவிலிருந்து அரசாங்கம் வருவிக்கவேண்டிய அவசியமில்லை. தென்னிலங்கைக்குத்தேவையான சீவல் தொழிலாளர்கள் வடக்கில் இருக்கிறார்கள்" என்று உடுப்பிட்டி எம்.பி திரு. கே. ஜெயக்கொடி தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவித்ததாவது!

தவறணை முறையை வெற்றிகரமாக இலங்கையில் அமுல் நடத்துமுகமாகதென்னிலங்கையில் கள்ளிறக்கும் தொழிலில் ஈடுபடுத்துவதற்கு இந்தியாவிலிருந்து 3000 கள்ளிறக்கும் தொழிலாளர்களைத் தருவித்து அவர்களுக்கு சிங்களமொழியில் பயிற்சியளிப்பதற்கு அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.

அரசாங்கம் விரும்பினால்

[9-ம் பக்கம் பார்க்க]

'லேக் ஹவுஸ்' பற்றி என். எம் விளக்கம்

கொழும்பு, வெள்ளி

"லேக்ஹவுஸ் பத்திரிகை ஸ்தாபனம் வெளி நாட்டு செலாவணி மோசடிகள் புரிந்துள்ளதாகக் கூறப்படுவது பற்றியும், இது பற்றி அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றியும் தெவிநுவர ஆட்சிமன்ற உறுப்பினர் திரு ரொனிடிமெல் மக்கள் பிரதிநிதிகள் சபையில் இன்று கேள்வி எழுப்பினார்.

அரசாங்கத்தின் தரப்பில் நிதி அமைச்சர் டாக்டர் என் எம் பெரேரா இதற்கு பதிலளித்தார். இந்த ஸ்தாபனத்தின் வெளிசெலாவணி சட்டவிதிகளை மீறல்கள் சம்பந்தமாக ஏற்கனவே, உள்நாட்டு வருமானவரி இலாகா அபராதம் விதித்திருப்பதாக டாக்டர் பெரேரா தெரிவித்தார். ஏனைய விஷயங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்காக சட்டவிதிகள் உருவாக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

வரி விளம்பரம்

இயந்திரங்கள், இயந்திர உதிரிப்பாகங்கள், உபகரணங்கள், ஓட்டு வேலைகள், சில்லுச்சக்கரம் வெட்டுதல் (Gear wheel cutting) என்ஜினியர்களின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். ராஜா மெஷின் கொம்பனி. 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3846

விற்பனைக்கு

மன்னார், பூநகரி ரேட்டடிக் பத்தாம் கட்டையில் இருபோகம் வேளாண்மை செய்யக்கூடிய நீர்ப்பாய்ச்சல் வசதியுள்ள நெற்காணி இருநூறு ஏக்கர். இருபத்தைந்து ஏக்கர் துண்டுகளாகப் பிரித்து விற்கப்படும். லாண்ட் இன்வெஸ்ட்மென்ட், 6, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 3902

புதிய சமூகக் கலை, ஆருடத்திற்கு உரியதும் மற்றும் ஏனைய பாடசாலை நூல்களும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். — கல்யாணி, பஸ்நிலையத்திற்கு முன்னால், தெற்குப்பக்கம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3910

விற்பனைக்கு

திறமான வாசனைமிக்க சோடா அத்தர் சோடா விற்கவைப்பதற்கும், கடுட்டு இசைப்புச் சுழித்த தயாரிப்பதற்கும் உபயோகமானது. பாவனையாளர்களால் மிகவும் விரும்பப்படுவது. எஸ். சுப்பிரமணியம் கொம்பனி, 53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 3845

Ford - Prefect E Y 8000 திறமான நிலையில் ரூபா 7250/-. — 12, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். 3909

மோரிஸ் கொன்சல் EL 2131 நல்லநிலையில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: 808, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3903

6 பரப்புக் காணி கிணறும் உண்டு. 5 பரப்பு அல்லைப்பிட்டி. — எஸ் பீ கே. சொலமன், தபால்கந்தோர், கண்டி. 3911

விற்பனைக்கு

பாவிக்கப்படாத சட்டிக் (2) (கலப்பை) (Disc (2) Plough) பின்வரும் விலாசத்துடன் தொடர்புகொள்ளவும். விளம்பரதாரர், 141/1, கோவில் வீதி, நல்லூர். 3908

கடைகளுக்குத் தேவையான புதிதாகச் செய்யப்பட்ட அலுமாரிகள் செற். சோகேஸ் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். ரதி வாச் வேக்ஸ் அன்ஸ் ரேசர்ஸ், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 3905

தேவை

"ஒளி" இலக்கிய மாத சஞ்சிகை யாழ்ப்பாண மாவட்டத்தில் விற்பனை செய்வதற்கு விற்பனையாளர்கள் தேவை. தனிநபர்களும் விண்ணப்பிக்கலாம். டிபாசிட் கட்டக்கூடியவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்படும். நிர்வாகி, 'ஒளி', 424, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 3912

கல்வி

ஆரம்ப வகுப்புகள், ஜி சி ஈ., அரசாங்க ஊழியர்களுக்கான சகல பரீட்சைகளுக்கும் தபால் மூலம் சிங்களம் கற்பிக்கப்படும். வெற்றிவேல் போதனா நிலையம் (தபால் மூலம் கல்விப் பகுதி) கொக்குவில் மேற்கு. கொக்குவில். 3888

வைத்தியம்

ஆலோசனை இலவசம். பல் கட்டுதல் அலரச் சலார் Rs 150/-. சிங்கப்பூர் பல் கட்டுமிடம், A. S. சங்கரப்பிள்ளை கட்டிடம், 2ம் மாடி ஆஸ்பத்திரி வீதி - பெரிய கடை, யாழ்ப்பாணம். 3869

வாதம், கிரந்தி தொய்வு ஆகிய வியாதிகளை முற்றாகக் குணப்படுத்துவதில் திறமை பெற்ற டாக்டர் எஸ். வல்லிபுரம் (D A M) தங்கபாஸ்கரன் வைத்தியசாலை, இராசா வீதி நல்லூர் மார்க்கெட், யாழ்ப்பாணம் 3898

வசியம்

வாழ்க்கையில் இஷ்டமிடும் காரியங்களை நிறைவேற்றுவதற்கு மட்டக்களப்பு மாந்திரிக வசியம் செய்து அனுப்பப்படும். பெயர் விபரங்களுடன் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம். ரகசியங்கள் வெளியிடப்படமாட்டாது. ஏ. எஸ். குட்டி, 57, சென்றல் ரோட், மட்டக்களப்பு. 3886

சோதிடம்

நிறம், வயது, பூவின் பெயர், குறித்து, 15 சத முத்திரையுடன் உறையனுப்பிப் பதில் பெறவும். இலவச சேவை மனோருத்தல ஆருடம், ஞானபண்டித வைத்தியசாலை, அதிபர் த. சண்முகராஜா, கொக்குவில். 3900

கள் திருட்டு

கைதடி, வெள்ளி

நாவற்குழியிலுள்ள கள்ளு மரங்களில் களவாகக் கள்ளு இறக்குகிறார்களாம். இதனால் தொழிலாளர் மரத்தில் ஏறி ஏமாற்றத்துடன் இறங்கவேண்டியிருக்கிறதாம். இது சம்பந்தமாக நாவற்குழியைச் சேர்ந்த ஒருவர் சாவகச்சேரிப் பொலிசாரிடம் முறையிட்டுள்ளார்.

பிள்ளைகளை பார்க்க அனுமதி

மீசாலை, வெள்ளி

பேரன் பேத்தியுடன் வசித்துவரும் தனது மூன்று பிள்ளைகளையும் பார்ப்பதற்கு அனுமதி கோரி மூன்று பிள்ளைகளின் தந்தையான ஒருவரால், சாவகச்சேரி நீதிபதி திரு. ஜே. ஜீ. ஆசீர்வாதம் முன்னிலையில் தொடரப்பட்டிருந்த வழக்கு விசாரணை, எடுத்துக்கொள்ளப்பட்டு ஒவ்வொரு மாதமும் 2-ம் 4-ம் சனிக்கிழமை தோறும் காலை 10 மணிக்கு குறித்த பிள்ளைகளைத் தகப்பன் பார்க்கும் பொருட்டு சாவகச்சேரி பிள்ளைகள் பாதுகாப்புக் கந்தோருக்குக் கூட்டி வரும்படி பேரன் பேத்திக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

கேள்விப் பத்திரம் கோரும் விண்ணப்பம்

யாழ்ப்பாணம், கோண்டாவில், பலாலி, சுன்னாகம், ஆகிய இடங்களிலுள்ள நெற்களஞ்சியங்களுக்கு எமது நெற்கொள்வனவு நிலையங்களிலிருந்து நெல்லை லொறி மூலம் ஏற்றிப் போவதற்கு ஒரு தொன்- ஒரு மைலுக்கு கூலி கோரும் விண்ணப்பப் பத்திரங்களை லொறிச் சொந்தக்காரர்களிடமிருந்து கரைச்சி வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் 29-1-72 சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாகக் கோருகின்றது.

விண்ணப்பிப்போர் சங்கத் தலைமைக் காரியாலயத்தில் ரூபா 25/- கட்டி கேள்விப் பத்திரங்கள் பெறவேண்டும். தெரிவுசெய்யப்படுபவர்கள் பிணை ரூபா 1000/- கட்டி சங்கத்துடன் ஒப்பந்தம் செய்தல்வேண்டும்.

சு. சிவநாதன்
பொதுமுகாமையாளர்
3398

தாபரிப்பு மாதம் 60 ரூபா

மீசாலை, வெள்ளி

செல்லம்மா என்னும் ஒரு தாய் தனது மூன்று பிள்ளைகளுக்கும் ஜீவனாம்சப் பணம் தனது கணவனிடம் பெற்றுத்தரும்படி சாவகச்சேரி நீதவான் திரு. ஜே ஜீ. ஆசீர்வாதம் முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கில் விசாரணை முடியும் மட்டும் தற்காலிகமாக ஒரு பிள்ளைக்கு 20ரூபா வீதம் மாதம் 60 ரூபா ஜீவனாம்சம் வழங்கும்படி நீதவான் தீர்ப்பளித்தார்.

தற்கொலை

உடும்பராய், வெள்ளி

கடந்த 10 வருடங்களுக்கு மேலாக கணவனால் கைவிடப்பட்டு வாழ்ந்துவந்த நடராசா நல்லம்மா (வயது 40) என்பவர் தற்கொலை செய்து கொண்டார்.

இவரது கணவன் 10 வருடங்களுக்கு முன் இவரைக் கைவிட்டுச் சென்றுவிட்டதாகவும், அன்றுவரை அவரை இவர் காணவில்லை என்றும் இதனால் இவர் மனமுடைந்திருந்ததாகவும் விசாரணையில் தெரியவந்தது. இறந்தவருக்கு இரண்டு பிள்ளைகள் உண்டு.

மரண விசாரணை அதிகாரி திரு. கி. பாலசுப்பிரமணியம் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்

தசாக்கிரியை

பிரம்மஸ்ரீ கார்த்திகேசு சின்னப்பு ஐயரின் தசாக்கிரியை, பிராத்தனை வைபவங்கள் இன்றும் (22-1-72), கிரகயஞ்ஞமும் மகேசுவர பூசை வைபவங்கள் நாளை (23-1-72) எனது இல்லத்தில் நடைபெறும்.

சி. கா. ஸ்ரீநிவாசஐயர்,
அரசடிக்காடு,
3395 காரைநகர்.

வின்ஸர் (யாழ்ப்பாணம்) [தினசரி 4 காட்சிகள்]
எம். ஜி. ஆர். [இரு வேடங்கள்] ஜெயலலிதா நடித்த
குடியிருந்த கோயில்

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். இரு வேடங்களில் ஜெயலலிதா-அசோகன் நடித்த
நீரும் நெருப்பும்

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி — ஜெயலலிதா முத்துராமன் - நாகேஷ் நடித்த
சவாலே சமாளி

இப்பொழுது நடைபெறுகிறது!
வெலிங்டன் - லிடோ
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்

பத்மஸ்ரீ
★ சிவாஜி கணேசன்
★ பத்மினி
★ நாகேஷ் ★ தங்கவேலு
நடித்த
சிவாஜி புரடக்ஷன்ஸ்
வியட்நாம் வீடு

யாழ். தியேட்டர் (காங்கேசன்துறை)
தினசரி 6-15, இரவு 9-30
சனி ஞாயிறு 2-30
எம்ஜி ஆர் -சரோஜாதேவி
எங்கவீட்டுப்பிள்ளை
(ஈஸ்ட்மன்கலர்)

சாந்தி (சுன்னாகம்)
சனி 4-15 மட்டும்
MOST BEAUTIFUL WOMAN IN THE WORLD
தினசரி 6-15, 9-30
ஞாயிறு 2-30
ஜெமினி-கே ஆர் விஜயா நடித்த
சங்கமம்

REGAL (Jaffna)
Daily 5-15 & 7-15 p.m.
Sat. Sundays 10-30
Jules Verne's
STRANGE HOLIDAY
(Cinemascope color)
தினசரி 2-00, இரவு 9-45
எஸ். எஸ். ஆர். - நாகேஷ் விஜயகுமாரி நடித்த
பூமாலை

வெல்லி சினிமா (மானிப்பாய்)
தினசரி 6-30, 10-00
சனி, ஞாயிறு 2-30
ஜெமினி - வாணிஸ்ரீ நடித்த
தபால்காரன் தங்கை

MANOHARA (Jaffna)
Daily 4 Shows
Henry Silva
in
EAGLES GATHER AT DAWN
Better than Dirty Dozen and The Wild Bounch

நாகம்மாள் சினிமா (சுன்னாகம்)
தினசரி 4-30 மட்டும்
சனி, ஞாயிறு 10-30
LET THEM LIVE
தினசரி 6-30 9-45
சனி, ஞாயிறு 2-30
சம்பூர்ண ராமாயணம்

நியூ கலிங்கன் (இணுவில்)
தினசரி 6-30, இரவு 10-00
சனி ஞாயிறு 2-30
எஸ். எஸ். ஆர் - தேவிகா நடித்த
மறக்க முடியுமா

இசை நடனக் கச்சேரி

இலங்கைத் தமிழ் இசையாசிரியர் சங்க ஆதரவில்
யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில்
22-1-72 சனிக்கிழமை மாலை 6-30 மணிக்கு
திரு. வி. கே. நடராசன் பாட்டு
செல்வி துவாரகா ஐயாத்துரை பரதநாட்டியம்
ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெறும்.
அங்கத்தவர்கள் தவறாது சமுகந்தருக
செயலாளர்
3396 இ. த. இ. ஆ. சங்கம்.

அணு ஏவுகணை பொருத்தப்பட்ட அமெரிக்காவின் புதிய நீர்மூழ்கிப் படை!

அதிபர் நிக்ஸனின் திட்டம்

வாஷிங்டன், ஜனவரி 21

1972-73-ம் ஆண்டுகளுக்கான படைச்செலவுகளை அதிகரிக்கப்போவதாக அமெரிக்க அதிபர் நிக்ஸன் அறிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபர் நிக்ஸன் மாநிலங்களுக்கு விடுத்த வருடாந்த அறிக்கையிலேயே இவ்விதம் அறிவித்துள்ளார்

அவர் மேலும் அதில், கம்யூனிஸ்ட் நாடுகளுடன் அமெரிக்கா சிநேகபூர்வமான உறவை ஏற்படுத்துவதோடு, அமெரிக்கா தனது பாதுகாப்பையும் வலிமைப்படுத்தவேண்டும் என்றும் இதற்காக 1972-73-ம் ஆண்டுகளில் அமெரிக்கப் படைச்செலவுகளை அதிகரிக்கப்போவதாகத் தெரிவித்துள்ளார் ஆனால் எவ்வளவுக்கு இந்த அதிகரிப்புச் செய்யப்படுமென்று அதில் அவர் தெரிவிக்கவில்லை. இருப்பினும் புதிய திட்டத்தில் அணு ஆயுதங்களை எடுத்துச்சென்று ஏவக்கூடிய அணுவினால் இயங்கும் விசேட நீர்மூழ்கிப்படகுப் படை ஒன்றை அமைக்கப் போவதாகத் தெரிவித்திருக்கிறார்.

சில வல்லரசுகள் தங்கள் படைபலத்தை அதிகரித்துக் கொண்டு வரும் பொழுது அமெரிக்கா தனது படையை அதற்கேற்ப பலப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தைப் புறக்கணித்துவிட முடியாது என்றார் அவர்.

உலகில் சமாதானத்தை நிலைநாட்ட அமெரிக்கா பாடுபட்டுவரும் என்றும் பேச்சுவார்த்தைகள் மூலம் வியட்நாம் யுத்தத்துக்கு ஒரு முடிவை ஏற்படுத்தவே அமெரிக்கா பாடுபடுவதாகவும் அதிபர் நிக்ஸன் தெரிவித்தார்.

அதிபர் நிக்ஸன் தமது செய்தியில் உலக விவகாரங்கள் பற்றி விரிவாக எடுத்துச் சொல்லிய பொழுதிலும், இந்தியத் துணைக் கண்ட நிலைமைகள் பற்றியோ பங்களாதேஷ் பற்றியோ அவர் எதுவும் தெரிவிக்கவில்லை. ஆனால் உலகின் எப்பாகத்திலாவது எப்பொழுதும் அமெரிக்கா தனது தன் நலத்தைப் பேணிப்பாதுகாக்குமென்று தெரிவித்துள்ளார்

ரொடீஷியாவில் மேலும் குழப்பங்கள்

சாலிஸ்பரி, ஜன 21

ரொடீசியாவில் மேலும் பல குழப்பங்கள் சில நகரங்களில் நடைபெற்றுள்ளதாகவும் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததால் பல கறுப்பர்கள் காயமடைந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும் அயன்ஸ்மித் அரசாங்கத்திற்கும் ரொடீசிய சுதந்திரம்பற்றி ஏற்பட்ட உடன்படிக்கைக்கு எதிராகவே இப்பொழுது கறுப்பர்கள் இங்கு தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்துவருகின்றனர். இந்த உடன்படிக்கைபற்றி ரொடீசிய கறுப்பர்களின் அபிப்பிராயத்தை அறிவதற்காக லார்ட் பியர்ஸ் தலைமையிலான பிரிட்டிஷ் கமிஷன் ஒன்று ரொடீசியாவில் சுற்றுப்பிரயாணம் செய்து வருகிறது.

முசாம்பிக் நாட்டுக்கும் ரொடீசியாவுக்குமிடையில் உள்ள எல்லை நகரிலேயே இவ்வெதிர்ப்பு ஆர்ப்பாட்டம் மிக மோசமாக நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதேபோல வேறு பல நகரங்களிலும் இவ்வெதிர்ப்பு ஆர்ப்பாட்டம் பரவியுள்ளதாம்.

இந்த ஆர்ப்பாட்டங்களின்பொழுது பல வீடுகளின் ஜன்னல்கள் உடைக்கப்பட்டதோடு பல ஐரோப்பியர்கள் காயமடைந்துள்ளனர். தலைநகரான சாலிஸ்பரிக்கு

(5-ம் கலம்பார்க்க)

இந்தியாவின் புதிய மாநிலங்கள்

புதுடில்லி, ஜன. 21

மணிப்பூர், திரிபுரா ஆகிய இருபகுதிகளும் இன்று தொடக்கம் இந்தியாவின் இரு புதிய மாநிலங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. இன்னோர் பிரதேசமான மிசூரம் யூனியன் பிரதேசமாகப் பிரகடனம் செய்யப்பட்டது.

திரிபுரா பண்டைய சமஸ்தானங்களில் ஒன்றாகும் 1936-ம் ஆண்டு ஆங்கிலேயருக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடிய மாநிலம் இது. "வெள்ளையனே வெளியேறு" என்ற கோஷம் இங்கு எழுப்பப்பட்டது. 1963-ம் ஆண்டு இது இந்தியாவின் யூனியன் பிரதேசமாக்கப்பட்டது.

……

கல்வி அதிபதிக்கு கடிதம்

கொழும்பு, வெள்ளி

தமிழ் ஆசிரியர்களுக்கு சுற்றறிக்கைகளைச் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மட்டும் அனுப்புவதன்மூலம் அவர்களுக்குக் காட்டும் பாகுபாட்டை இலங்கை ஆசிரியர் சங்கம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறது என்று குறிப்பிடப்பட்ட மகஜர் ஒன்றை கல்வி மா அதிபதிக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் அனுப்பிவைத்துள்ளது.

சகல சுற்று நிருபங்களையும் தமிழிலும் அனுப்பும்படி சகல வித்தியாபதிகளையும் கேட்கும்படியும் இவர்களது மகஜரில் கல்வி மா அதிபதியிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

(1-ம் கலத்தொடர்ச்சி)

250 மைல் தெற்கே இவ்வார்ப்பாட்டங்கள் நடைபெற்றுள்ளன.

கமிஷன் தலைவர் வருத்தம்

தங்கள் கருத்துக்களைச் சொல்வதற்கு யாருக்கும் சுதந்திரம் உண்டு. அவர்கள் இதுபற்றிக்கூறும் கருத்துக்களை அறிவதற்காகவே பிரிட்டிஷ் கமிஷன் இங்கு வந்துள்ளது. துரதிருஷ்டவசமாக அவர்கள் கருத்தைத்தெரிவிப்பதற்கு மாறாக வன்முறையில் ஈடுபட்டு குழப்பங்களை ஏற்படுத்துவது மிகவும் வருத்தத்திற்குரிய விஷயம் என்று கமிஷன் தலைவர் பியர்ஸ் பிரபு தெரிவித்துள்ளார்.

வைப்புத் திட்டங்கள்?

மேர்கன்டைல் கிறெடிற்
லிமிட்டெட்டில்
உங்களுக்கு வேண்டியவர்
DEPOSITS MANAGER

எமது வைப்புப் பணப்பகுதி முகாமையாளர், உங்கள் கேள்விகளுக்குப் பதில் தருவார். அவரை எந்நேரமும் நீங்கள் சந்திக்கலாம். "பாதுகாப்பான முதலிட்டு வாய்ப் புகள்" பற்றி ஆலோசனை கூற அவர் எப்பொழுதும் தயாராகவிருக்கிறார். அவருடன் தொடர்பு கொள்ளுங்கள். உங்கள் பணத்தினைப் பெருக்குவதற்கு அவர்தான் சரியான ஆள்!
உங்கள் பணத்தினை ஆகக்கூடிய அளவு பெருக்குவதற்கான இரகசியத்தினை எடுத்துரைத்து, எமது பல்வேறு வைப்புப்பணத் திட்டங்கள்பற்றி விளக்குவார்; அத் திட்டங்களாவன......

காலமுறை வைப்புப் பணம்
8%—3 மாத அறிவித்தலின்மீது மீளப் பெறமுடியும்

தவணைமுறை வைப்புப் பணம்
மாதவித, 6 மாதவித, ஆண்டுவித வட்டி செலுத்தப்படுவதற்குரியதாகும்.
2 ஆண்டு வைப்புப்பணம் — 12%
4 ஆண்டு வைப்புப்பணம் — 13%

நிலையான வைப்புப் பணம்
முதிர்வடைவதன்மீது, வட்டி செலுத்தப்படுவதற்குரிய தாகும்.
3 ஆண்டு வைப்புப்பணம் — 13%
5 ஆண்டு வைப்புப்பணம் — 14%

எல்லா வகை வைப்புப்பணத் திட்டங்களின் மீதும் உரிய வட்டியுடன். அவசரமாகத் தொகை ஒன்றை மீளப பெறுவதற்கான விண்ணப்பங்களைக் கம்பெனி கவனத் திற்கு எடுத்துக்கொள்ளும்.

மேர்கன்டைல் கிறெடிற் லிமிட்டெட் இலங்கையின் மிகப்பெரிய நிதிநிறுவனம்

'மேர்க்கன்டைல் ஹவுஸ்' 51-53 இராணி வீதி கொழும்பு-1 தொலைபேசி: 23283—4-5.

MC 34-71-MASTERS

தடைசெய்யக்கோரும் சுந்தரர் மனுவைத் திருத்த அவகாசம்

கொழும்பு, வெள்ளி

புதிய அரசியலமைப்புத் திட்டம் அமுல் செய்யப்படுவதை தடைசெய்யும்படி கோரி முன்னுள் எம் பி திரு சி சுந்தரலிங்கம் தாக்கல் செய்த மனுவை திருத்தியமைக்க கொழும்பு உயர்நீதிமன்றம் நேற்று அவகாசம் வழங்கியது.

கொழும்பு உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த இந்த மனுவில் அட்டோனி ஜெனரல், அரசியல் அமைப்புத் திட்ட அமைச்சர் திரு கொல்வின் ஆர் டி சில்வா, தகுதிபெற்ற அதிகாரி திரு எஸ் தசநாயக்கா ஆகியோரைப் பிரதிவாதிகளாக திரு சுந்தரலிங்கம் குறித்துள்ளார்.

தற்போதைய அரசியலமைப்புத் திட்டத்தை உருவாக்க 2வது பிரதிவாதியான அரசியலமைப்புத் திட்ட அமைச்சர் எடுக்கும் நடவடிக்கையை தடைசெய்யும்படி திரு சுந்தரலிங்கம் மனுவில் கோரியுள்ளார்.

இம்மனு நீதிபதிகள் திரு வீரமந்திரி, திரு விஜயதிலக ஆகியோர் முன் விசாரணை செய்யப்பட்டது.

அரசியலமைப்புத் திட்டத்திற்கெதிராக ஏற்கனவே ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டு நிராகரிக்கப்பட்டுள்ளதெனவும் அம்மனுவுக்கும் புதிய மனுவுக்குமுள்ள வித்தியாசம் இப்புதிய மனுவில் தெரிவிக்கப்படவில்லை எனவும் நீதியரசர் வீரமந்திரி கூறினர்.

இந்த வித்தியாசத்தை உள்ளடக்கி மனுவை திருத்தியமைக்க அவகாசமளிக்கும்படி திரு சுந்தரலிங்கம் கோரினர்.

இக்கோரிக்கையை ஏற்ற நீதியரசர்கள் அவகாசம் வழங்கினர் (நா)

ஆங்கிலத்தின் தரத்தை உயர்த்த வழி என்ன?

வடபகுதி அதிபர்களுக்கு சுற்றுநிருபம்

பருத்தித்துறை, வெள்ளி

'இரண்டாம் மொழியாக இன்று விளங்கும் ஆங்கில மொழியின் தரங்குறைந்து காணப்படுவதற்குக் காரணங்களையும், மீண்டும் அம்மொழியின் தரத்தை உயர்த்துவதற்கான வழிவகைகள் எவையென்பதையும் வடபகுதிக் கல்வித் தலைமைப் பீடம் வடபகுதிப்பாடசாலை அதிபர்களிடம்கோரி ஒரு சுற்றுநிருபத்தை அனுப்பியுள்ளது. இதற்கான நிர்வாகரீதியான நடவடிக்கைகள், பாடசாலை ரீதியான நடவடிக்கைகள், ஆசிரியர் தலைமை, சேவையிலுள்ள ஆசிரியரின் திறமையை உயர்த்துவதற்கான ஒழுங்குகள் அவர்களுக்கான தூண்டுதல்கள், பாடப்புத்தகங்கள், வகுப்பறையில் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் ஆகியவைபற்றி ஆசிரியரின் கருத்துக்களைக் கல்விப்பகுதி கோரியுள்ளது.

அமெரிக்க வித்துவானின் ஜாஸ் கச்சேரி

கொழும்பு, வெள்ளி

அமெரிக்காவின் 'ஜாஸ்' வாத்தியத்தில் புகழ்பெற்றவரான டியூக் எல்லிங்டனும் அவரது குழுவினரும் இலங்கையில் ஒருநாள் கச்சேரி செய்யவிருக்கின்றனர். இவர்களது கச்சேரி இம்மாதம் 26-ந் திகதி இரவு கொழும்பில் வனாத்தமுல்லை சேர்ப்பன் டைன் வீதியிலுள்ள தமிழ் யூனியன் மைதானத்தில் நடைபெறும்.

பிணையில்

கல்வியங்காடு, வெள்ளி

மயிலிட்டி தெற்கில் நடைபெற்ற நீர் இறைக்கும் இயந்திரத் திருட்டுச் சம்பந்தமாக அவ்வூர் வாசியான ஒருவரது வீட்டை சோதனையிட்டுச் சென்ற பொலிசார் அவ்வீட்டிலிருந்து மூன்று வடிசாராயப் போத்தல்களைக் கைப்பற்றினர். சந்தேக நபர் மல்லாகம் நீதிமன்றத்தில் நீதவான் திரு ஜ சிவானந்தன் முன்னிலையில் விசாரணைசெய்யப்பட்ட போது நீதவான் 150 ரூபாய் பிணையில் செல்ல அனுமதி வழங்கினர்.

இன்றைய பலன்

தை மாதம் 8-ந் திகதி

[22-1-72]

மேஷம்- குடும்பக் கவலை தலைதூக்கும்; பிதாவழிப் பிணக்கும் இடமுண்டு; அந்நியர்கள் மூலம் தொல்லைகள் தோன்றி மறையும்.

ரிஷபம்- வாகனச்சொந்தக்காரர்களுக்கு சிறப்பான தினம்; ஆசிரியர்கள் வாழ்க்கையில் போற்றப்படுவார்கள்.

மிதுனம்- மக்களால் மகிழ்ச்சி; மனம் நிறைந்த வாழ்வு; புதுமையில் நாட்டம்; புதுப் பொலிவுமுண்டு.

கடகம்- பகை மூட்டம் தோன்றும்; பங்கமும் உடன்சேரும்; மிகையான யோசிக்கினலே மனதும்பாழாய்ப்போகும்.

சிம்மம்- குளுமையான சம்பவங்கள் இடம் பெறும்; வாழ்க்கையில் சுவை தோன்றும்; கலைஸ்திரவழியால் இலாபமும் கிடைக்கும்.

கன்னி- சூழ்ச்சியின் உச்சக்கட்டம் வேதனையில் வீழ்த்திவிடும்; ஆழ்ந்த சிந்தனையுடன் காரியத்தில் கண்வைப்பீர்.

துலாம்- இலட்சியப்பாதையில் வெற்றிநடைபோடுவீர்; உயர்மட்டத்து அன்பும் ஆசியும் கிடைக்கும்; பதவி உயர்வுக்கும் இடமுண்டு.

விருச்சிகம்- தொழில்துறையில் வெற்றி; விருந்தினர்கள் வருகையுடன் வேடிக்கை பலவுண்டு; இசைப்படுவாயின் இன்பத்தின் மின்னல்.

தனுசு- மதிப்பு உயரும்; பொதுமக்கள் ஆதரவும் கிடைக்கும்; புத்திரரால் புகழுமுண்டு; புதினமும் கேட்பீர்.

மகரம்- இலக்கிய ரசனையுடன் இசையிலும் பிரியம் ஏற்படும்; அறிஞர்களின் ஆதரவு கிடைக்கும்; கவிஞர்கள் போற்றப்படுவார்கள்.

கும்பம்- எதிர்பாராத விளைவுகளின் மூலம் செலவுகள் அதிகமாகும்; சிலர் வாழ்க்கையில் கடன்படவும் நேரிடலாம்.

மீனம்- முன்னேற்றம்தடைபடும்; குறுக்குவழித்தலையீடு குழப்பத்தை ஏற்படுத்தலாம்; அமைதிநன்று.

சோதிட கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

34-வது மகாஜன சம்பத சீட்டிழுப்பு
ஜனவரி 31-ந் திகதி நாவலப்பிட்டியில் நடைபெறும்
விசேட பரிசுகளாக இறக்குமதி செய்யப்பட்ட
கைக்கடிகாரங்கள் - அச்சடி நைலெக்ஸ் சாறிகள்

1-ம், 2-ம், 3-ம் பரிசு பெறும் டிக்கெட்டுகளுக்குரியவர்கள், தேசிய லொத்தர்சபைக்கு ரூபா 1000/- செலுத்தி இறக்குமதி செய்த கூறை பட்டுச்சேலை ஒன்றை அல்லது ரூபா 750/- செலுத்தி இறக்குமதி செய்த இணைக்கூறை பட்டுச்சேலை ஒன்றை, இருப்பு முடியும்வரை, 'முதல் வருபவருக்கு முதல் தருவது' என்ற அடிப்படையில் பெற்றுக் கொள்ளலாம்.

பரிசுபெறும் டிக்கெட்டுகள் உள்ளடங்கிய எல்லா நூறு (100) இலக்கங்களுக்குரியவர்கள் தேசிய லொத்தர் சபைக்கு ரூபா 300/-க்கு மேற்படாமல் செலுத்தி ரகம் குறிப்பிடப்படாத இறக்குமதி செய்த கைக்கடிகாரத்தை அல்லது ரூபா 60/- செலுத்தி இறக்குமதி செய்த அச்சடி நைலெக்ஸ் சாறி ஒன்றை, இருப்பு முடியும்வரை "முதல் வருபவருக்கு முதல் தருவது" என்னும் அடிப்படையில் பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பிட்ட கையிருப்பே உள்ளதால், இவ்விசேஷ பரிசுகள் யாவும், இருப்பு முடியும்வரை "முதல் வருபவருக்கு முதல் தருவது" என்னும் அடிப்படையில் 3-2-72 முதல் 17-2-72 வரை (இரு தினங்களும் உட்பட) தினசரி காலை 9-00 மணி முதல் மாலை 3-00 மணிவரை தினசரி அடையாளச் சின்னங்களைக் கொடுப்பதன்மூலம் வழங்கப்படும். ஒரு நபர் ஒரு முறையில் ஒரு டிக்கெட்டையே கையளிக்க முடியும்.

இன்றே ஒரு மகாஜன சம்பத டிக்கெட்டை வாங்கி விசேட பரிசுக்கும் உரியவராகுங்கள்!

விசேட பரிசுகளுக்குரியவர்கள், விசேட பரிசாகப்பெறும் பொருட்களை அவை பெறும் இடத்தில் வைத்தே பரீட்சித்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். ஏதாவது பழுது அல்லது சேதம் இருப்பின் அதை உடனே திருப்பிக் கொடுத்துவிடவும். எடுத்துச் செல்லப்பட்ட பொருட்கள் பின்னர் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. பெறுமிடத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட பொருட்களில் பின்னர் பழுது அல்லது சேதம் இருப்பின் அப்பொருட்களுக்கு சபை பொறுப்பானதல்ல.

தேசிய லொத்தர் சபை

'பல்கலைக்கழக பிரவேசத்துக்கு இந்துசமயத்தை அங்கீகரிக்குக'

அரசிடம் தெரிவிக்கத் தீர்மானம்

மாவிட்டபுரம், வெள்ளி

'பல்கலைக்கழகத்தில் இந்து மாணவர்களின் வசதியை முன்னிட்டு பல்கலைக்கழகப் பிரவேசத்துக்கு இந்து சமயத்தை அங்கீகரிக்கவேண்டும்' என்று அரசுக்கு ஆலோசனை வழங்குவதென அகில இலங்கை இந்துமாமன்றம் முடிவுசெய்துள்ளது.

அகில இலங்கை இந்து மாமன்றத்தினரால் யாழ் நகர் சைவப் பிரமுகர்களைக் கூட்டி இந்துக் கல்லூரியில் கூட்டப்பட்ட இக்கூட்டத்துக்கு இந்துமாமன்ற உபதலைவர் திரு சி லஷ்மணன் தலைமை தாங்கினர்.

வானொலியில் நற்சிந்தனை, சைவநீதி, முத்திநெறி ஆதியன ஒழுங்குசெய்வதுபற்றியும், பல்வேறு பாடசாலைகளில் சைவசமயம் போதிக்க சைவ ஆசிரியர்கள் இல்லாக் குறையை போக்குவதுபற்றியும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டு இறுதியில் கீழ் கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.

▨ பல சைவஸ்தாபனங்கள்மூலம் வானொலி நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தல் வேண்டும்.

▨ சைவ மகாநாடுகளைத்து இதுசம்பந்தமாக விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தல் வேண்டும்.

▨ யாழ். நகரில் நடைபெறும் முக்கிய சைவப்பிரசங்கங்களை வானொலிப் பகுதியினர் பதிவுசெய்து ஒலிபரப்பவேண்டும்.

▨ இந்துசமயம் பல்கலைக்கழகப் பிரவேசத்திற்கு அங்கீகரிப்பதற்கு வழிவகுக்க வேண்டும்.

▨ சைவப்பாடசாலைகளில் ஆசிரியர் விகிதத்தில் விசேஷ பாட ஆசிரியர் போன்று சைவசமயம் போதிக்க ஆசிரியர்கள் நியமிக்கவேண்டும்.

▨ இடைக்கால ஒழுங்காக சைவசமயம் போதிக்கும் ஆசிரியர்களுக்கு இந்துமாமன்றம் வித்தியாதிபதியினருடன் இணைந்து விடுமுறைக்கால வகுப்புக்களை நடாத்தி தராதரப்பத்திரம் வழங்குதல் உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் இவ்வேலைகளைக்கவனிக்க அமைப்புச் செயலாளராக யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியர் திரு வி. சிவசுப்பிரமணியம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

(22-1-72) சனி

(செய்திகள்: காலை 6-30, பகல் 12-45 மாலை 6-00, இரவு 9-00)

294 மீ அலை 59 மீ

காலை 6-15 நாதாஞ்சலி- மங்களவாத்தியம் 6-20 சைவநற்சிந்தனை - ம. நமசிவாயம், 6-25 கத்தோலிக்க நற்சிந்தனை- சங். பிதா. ஜோசப் செல்வராஜா, 6-50 உரைச்சித்திரம்- செ வேலாயுதபிள்ளை, 7-05 திருப்பாடல், 7-30 குரல்வளை, 8-00 இசை வேளை- எஸ் சோமசுந்தரம். 8-15 இஸ்லாமியகீதம்

இரவு 6-15 மாணவர் மன்றம்- நடத்துபவர்: வானொலி அண்ணா, 6-30 பாட்டு: சௌந்தரவல்லி உமாமகேஸ்வரன், 7-00 விவசாயக் கருத்தரங்கு. 7-30 வெளிநாட்டுச் செய்திகள், 7-35 வானொலிக் குறுக்கெழுத்துப் போட்டி இலக்கம் 20 தயாரிப்பு: என். சிவராஜா, 9-30 நாடகம்- வெள்ளையுள்ளம்; எழுதியவர்: எஸ் ராஜம்புஷ்பவனம் தயாரிப்பு: கே எம் வாசகர் 10-00 நேயர் விருப்பம்

அபராதம்

மீசாலை, வெள்ளி

பனை காரியாதிகாரிப் பகுதியைச் சேர்ந்த வண்ணாங்கேணி என்னும் இடத்தில் பெண் பனைகள் தறித்த ஒருவருக்கு சாவகச்சேரி நீதிபதி 175 ரூபா அபராதம் விதித்தார்.

6 நபர்கள் 17 பெண் பனைகளை உத்தரவில்லாமல் தறித்தார்களென்று பச்சிலைப்பள்ளிப்பகுதி இத்தாவில் கிராமசேவகரால் பனைக்காரியாதிகாரிக்கு அறிவிக்கப்பட்டது.

பனை காரியாதிகாரி திரு. சோ. அருணாசலம் சாவகச்சேரி நீதிபதி திரு. ஜே. ஜீ ஆசீர்வாதம் முன்னிலையில் வழக்குத் தொடர்ந்தபோது நீதிபதி 1-ம் எதிரி வே. சின்னையா என்பவரைக் குற்றவாளியாகக் கண்டு 175 ரூ. அபராதம் விதித்தார்.

தலா 100 ரூபா அபராதம்

மீசாலை, வெள்ளி

வெங்காயம் ஏற்றிக் கடத்த முயன்ற இருலொறிகள் கைப்பற்றப்பட்டன.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவைகள் என்று சொல்லப்படும் இந்த லொறிகள் கேரதீவு மார்க்கமாகக் கடத்துமுயன்றதாகச் சொல்லப்பட்டது. சாவகச்சேரிப் பொலிஸ் சார்ஜன்ட் திரு. கே. சிவப்பிரகாசம் இவற்றைக் கைப்பற்றினர். ஒரு லொறியில் 145 மூடை வெங்காயமும், மற்றதில் 126 மூடை வெங்காயமும் காணப்பட்டன. லொறிகள் சாவகச்சேரி நீதவான் முன் ஆஜர்செய்யப்பட்டு ஒவ்வொருலொறியிலுமுள்ள இரண்டுபேரில் இரண்டாவதுநபர் விடுதலைசெய்யப்பட்டு ஒவ்வொருலொறியிலும் உள்ள 1வது நபர்குற்றவாளியாகக் காணப்பட்டு சாவகச்சேரி நீதவான் திரு. ஜே. ஜீ. ஆசீர்வாதம் தலா 1000 ரூபா அபராதம் விதித்தார்.

யாருடையது?

யாழ்ப்பாணம், வெள்ளி

மானிப்பாயைச் சேர்ந்த திரு. சுப்பிரமணியம் குமாரசாமி என்பவரால் நகரிடைக்கு வீதியிலிருந்து அடைவுதுண்டு ஒன்றும், கார் லைசென்ஸ் புத்தகமும் கண்டெடுக்கப்பட்டு "ஈழநாடு" காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் காரியாலய நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

Flies........?

BAYGON BAYER
wipes out pests!

பேகோன்
ஹெகெம்
லிமிட்டெட்
400, டீன்ஸ் வீதி,
கொழும்பு.

உள்ளூராட்சிமன்ற அதிகாரங்கள்

முப்பது ஆராய்ச்சி உத்தியோகத்தர் நியமனம்

கோட்டை, வெள்ளி

பொதுநிர்வாக உள்ளூராட்சி உள்நாட்டமைச்சு 30 ஆராய்ச்சி உத்தியோகத்தர்களை நியமித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களுக்கும் கூடிய அதிகாரங்கள் வழங்குவதையொட்டியே இந்த 30 ஆராய்ச்சி உத்தியோகத்தர்களும் நியமிக்கப்படுகிறார்கள். நிர்வாகம், நிதி, முகாமை ஆகியவற்றில் உள்ளூராட்சிமன்றங்களுக்கு அமைச்சு கூடிய அதிகாரங்கள் வழங்கவிருக்கிறது

யாழ். அரச செயலகத்தில் ஆள் பதிவு இலாகா

யாழ்ப்பாணம், சனி

1968ம் ஆண்டின் 32 இலக்க ஆட்களைப் பதிவதற்கான சட்டத்தின்கீழ் ஆட்களைப் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான புதிய கந்தோர் ஒன்று யாழ்ப்பாணம் அரசாங்கச் செயலகத்தில் நிறுவப்பட்டுள்ளது.

இம்மாதமுதல் இயங்கிவரும் இப்புதிய அலுவலகத்திற்கு 47 உத்தியோகத்தர்கள் அனுப்பப்பட்டுள்ளனர். இந்த உத்தியோகஸ்தர்கள் பெப்ரவரிமுதல் 18 வயதுக்கு மேற்பட்டவர்களைப் பதிவதற்கான படம் எடுக்கும் ஆரம்பமுயற்சிகளை மேற்கொள்ளவிருக்கின்றனர் என மேற்படி அலுவலக உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார். வடபகுதியில் இயங்கிவரும் இக்காரியாலயத்தின் உதவி ஆணையாளர்களாக திரு எம் இராசரத்தினம், திரு எஸ் பொன்னம்பலம் ஆகிய இருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

(ஒ. நி

பிரம்மஸ்ரீ சின்னப்பு ஐயர்



காரைநகர் அரசடிக்காடு கதிர்வேலாயுதசுவாமி கோவில் ஆதீன கர்த்தாவும், பிரதம அர்ச்சகருமான பிரம்மஸ்ரீ வி. கார்த்திகேசு சின்னப்புஐயர் அவர்களின் தசாக்கிரியைகள் இன்று காரைநகரில் நடைபெறுகிறது. 28-3-1880 ஆம் ஆண்டு பிறந்த இவர் ஒருமுறை கதிர்காம யாத்திரை மேற்கொண்டு திரும்பும்போது, முருகன் வேலாயுதரூபத்தில் காட்சி கொடுத்ததைத் தொடர்ந்து அவ் வேல்வடிவத்தை இந்தியாவிலிருந்து ஆசாரிகளை வரவழைத்து, விக்கிரகமாக வார்ப்பித்து, இவ்வாலயத்தில் 1929-ல் பிரதிஷ்டை செய்தார். அன்றுதொட்டு இன்றுவரை கந்தபுராணப்படிப்பு வருடந்தோறும் நடைபெற்று வருகிறது. இவரும் இவரது பாரியார் சௌந்தரம்மாவும் வருடாவருடம் இவ்வாலயமுன்றலில் தீக்குளித்து வந்தனர். 92-வது வயதில் இம்மாதம் 11-ந் திகதி இறைவனடி சேர்ந்தார். வேதாகமவித்தகனும், பிராமணோத்தமருமான இவர் காரைநகரில் மிகப் பிரபல்யம்பெற்று விளங்கினார். தம்மை நேசிக்கும் அன்பரிடம் தாம் ஒரு 'சின்னப்பையன்' என்றும், 'தொண்டர்க்குத் தொண்டன்' என்றும்கூறி சிறந்த கொள்கையுடையராய் வாழ்ந்தார்.

இவ்விதம் கதிர்காமத்தையன் அனுக்கிரகம் பெற்று நல்லறத்துடன் இல்லறம் நடாத்தி வாழ்ந்த பிரம்மஸ்ரீ ஐயர் அவர்கள் கதிரமலையப்பன் திருவடி நீழலடைந்து சிவப்பேறெய்தும் வண்ணம் பிரார்த்திப்போமாக.

இரு அலை வரிசை கொண்ட ரேடியோ
ரூ. 325/=
SONY®
8R-24 MS
ஸோனி
சிற்றலை, மத்திய அலை ஆகிய வற்றுடன் மிக நேர்த்தியான ஒலி அமைப்பிற்கு, உள் அமைக்கப்பட்ட ஒலிக் கம்பம் உடையது. நான்கு டோர்ச் பாட்டரிகளில் இயங்குவது.
சிடில்ஸ் சினேரேடியோ
9-10, கன்சிஸ்டரி கட்டிடம், பூந்தோட்ட வீதி, கொழும்பு 11.
கிளைகள் — கண்டி, யாழ்ப்பாணம், கம்பளை, பம்பலப்பிட்டி.

நாட்டிய கலாசேகர வழுவூர் பி. இராமையாபிள்ளையின் சிஷ்யை செல்வி மாலதி தர்மாவின் பரதநாட்டியம் இன்று மாலை 6-30 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. இலங்கை தேசிய க்ஷயரோக தடுப்பு சபையின் வடபிரதேச நிறுவனத்துக்கு நிதி சேர்க்குமுகமாக இவரின் பரத நிகழ்ச்சி நடைபெறுகிறது. யாழ். அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகராவும், இலங்கை தேசிய க்ஷயரோக தடுப்பு சபைத் தலைவர் டாக்டர் ஜே. ஏச். எச். ஜெயசூரியாவும் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்கின்றனர்.

சீவல் தொழி...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தொழிலாளர்களை இந்தியாவிலிருந்துவருவிக்கவேண்டிய அவசியமில்லை. வடமராட்சியிலிருந்து இரண்டாயிரமோ அல்லது நாலாயிரம் சீவல் தொழிலாளர்களையோ கொடுத்துதவ முடியும். வடமராட்சியிலிருந்து சீவல் தொழிலாளர்கள் தென்னிலங்கைக்குச் சென்றால் அரசாங்கம் தென்னிலங்கையில் தவறணை முறையை வெற்றிகரமாக அமுல் நடத்த முடியும். அதேவேளையில் நமது சீவல் தொழிலாளர் வடமாகாணத்திமட்டும் தவறணைமுறையை ஆதரித்து சீவல்தொழிலில் ஒருபோதும் ஈடுபடமாட்டார்கள் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

வடமராட்சியிலிருந்து சீவல்தொழிலாளர்கள் தென்னிலங்கைக்கு வர விரும்புவார்களானால், ஏன் அவர்கள் வடபகுதியில் தொழில் செய்ய மறுக்கவேண்டும் என்ற கேள்வி எழலாம். வடபகுதியில் பரவணிமுறையை ரத்துச்செய்து அரசாங்கம் தவறணை முறையை அமுல் செய்வதை இப்பகுதிச்சீவல் தொழிலாளர் ஆதரிக்கவில்லை. சீவல் தொழிலாளர் தமது பொருளாதார நிலையைச் சீவல்தொழில்மூலமே ஓரளவு வளர்த்துக்கொண்டிருக்கிறார்கள் அரசாங்கம் தவறணை முறையை அமுல் செய்யும் பட்சத்தில் சீவல் தொழிலாளரின் பொருளாதாரம் குன்றும் என்ற ஒரே காரணத்திற்காகவே வடக்கில் அவர்கள் தவறணை முறையை ஆதரிக்கவில்லை.

(கட்டு நி)

......

ரயில்.பஸ் மோதல் 16 பேர் காயம்

கொழும்பு, வெள்ளி

அவிசாவளைக்கு அருகில் ஏற்பட்ட ரயில்-பஸ் மோதலில் 16 பேர் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஆறுபேர் பலத்த காயங்களுக்குள்ளாகியுள்ளனர். புவாக்பிட்டிய ரயில்வே நிலையத்தின் அருகில் இந்த விபத்து ஏற்பட்டது. (நா)

சுதந்திரதின செலவுக்கு ரூ. 250 மட்டும்

கொழும்பு, வெள்ளி

இவ்வருடம் சுதந்திரதின கொண்டாட்டத்துக்கான செலவுகளுக்கு 250 ரூபா மட்டுமே அரசாங்கம் செலவிடும். நாட்டில் நிலவும் நிதி நெருக்கடியைக் கருத்திற்கொண்டு, 250 ரூபா மட்டுமே சுதந்திரதினத்துக்குச் செலவு செய்யும்படி சகல அரசாங்க அதிபர்களுக்கும் அனுப்பிவைத்துள்ள சுற்று நிருபத்தில் பொதுநிர்வாக அமைச்சின் நிரந்தரச் செயலாளர் திரு. மகாதேவா கூறியுள்ளார்.

அரசாங்க நன்கொடைப் பணமோ அல்லது பொதுமக்களிடமிருந்து திரட்டப்படும் நிதியோ சுதந்திரதின கொண்டாட்டத்துக்கு மேலதிகமாகச் செலவு செய்யக்கூடாது என்றும் திரு. மகாதேவா தமது சுற்றறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

......

மானிப்பாயில் வழிபாடு

யாழ்ப்பாணம், சனி

சுவாமி ஞானப்பிரகாசர் தினமான இன்று பிற்பகல் 5 மணிக்கு அன்னாரது வாழ்வுக்கும் சேவைக்கும் இறை வழிபாடு நடத்தப்படும்.

ஜெயஸா கதை முடிந்தது

கொழும்பு, வெள்ளி

களுத்துறை இரட்டைக் கொலை வழக்கின் முதலாவது எதிரியான அப்பிரிடி ஜெயசா நேற்று வியாழக்கிழமை மாலை 8 மணிக்கு கொழும்பு வெலிக்கடைச் சிறைச்சாலையில் தூக்கிலிடப்பட்டார்.

இரண்டாவது எதிரியான களு அப்பரிட இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு தூக்கிலிடப்படவிருந்தார். [நா]

நல்லூர்

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

யோடு வெளிவந்தது. பாடசாலை மாணவனாயிருந்த காலத்தில்சுவாமிநாதபிள்ளை மான் அவைத்திலிருந்து ஞானப்பிரகாசர் எடுத்த உடன் சவிபாடம் அடுக்க முடியவில்லை. அதனால் இடைக்கிடை ஆசிரியரிடம் அடிபட்டதுமுண்டு. ஆனால் அப்போதும் சத்தியவசனத்திர ஆராய்ச்சிமேற்கொண்ட ஆவல் பின்னர் அந்த வரத்தை அளித்துவிட்டது போலும். எனினும் இல சமயபாடல்கள் இயற்றி யாழ்ப்பாண மேற்றிராசனத்திலே பாவனையிலிருக்கும் ஞானக் கீர்த்தனை நூலை வெளியிட்டார். அவரை அறிந்தவர்கள் அநேகர் தம்கள் செய்யுள் கவிதைகளை ஆராய்ந்து திருத்தம்செய்ய அவரிடம் அனுப்பி வைப்பர். இவர் அகராதி ஆசிரியராகவும் இருந்தார். 1927ல் அவர் வெளியிட்ட "தமிழ் அமைப்புற்ற வரலாறு" எனும்நூலே இப்பொருள் பற்றிய முதற்நூலாகும். தமிழ் சொற்பிறப்பின் எடுத்துக்காட்டுகள் தென்னிந்திய பத்திரிகைகளிலேவெளிவந்தது.

இவர் யாழ்ப்பாண சரித்திர சங்கத்தின் அக்கிராசனராயும், யாழ்ப்பாண கீழைத்தேச ஆராய்ச்சிக்கழகத்தின் உபதலைவராகவும் தெரியப்பெற்றார். இவரின் இன்னும் இடம்பெறாத அவரது சரித்திர நூல்கள் பின்வருவன. யாழ்ப்பாண சத்தியவேத சரித்திரம், யாழ்ப்பாண மேற்றிராசனத்தில் 25 வருட சத்தியவேத முன்னேற்றம், இலங்கைச் சத்தியவேத சரித்திரம், மருதமடுத்திருப்பதிச் சரிதை, தமிழருக்கு சாதி உற்பத்தி, இந்தியபுராதன நாகரிகமும் காலநிர்ணயமும். சத்தியவேத புத்தசமய சரித்திரக் குறிப்புகள், சத்திய வேதமும் சைவசமயங்களும் சந்திக்குமிடம் என்பனவாகும்.

மணிவாக்கு

சொற்பமான தத்துவஞானம் மனிதர்களின் மனங்களை நாத்திகத்தின்பால் செலுத்தும்; ஆனால் ஆழ்ந்த ஞானம் பிறர் மனங்களைச் சமயத்தின் பால் செலுத்தும். —பேக்கன்

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

சனி வாரம் விரோதிகிருது வருஷம் தை மாதம் 8-ம் திகதி (22-1-72)

எதிர்காலம் என்ன?

எதிர்க்கட்சித் தலைவர் திரு ஜே. ஆர். ஜயவர்த்தனாவின் பெயர்தான் இப்பொழுது பத்திரிகைகளிலும் அரசியல் வட்டாரங்களிலும் பொதுமக்கள் மத்தியிலும் கூடப் பெரிதாக அடிபடுகிறது. இந்த நாட்டை ஆளும் வாய்ப்பைப் பெற்றிருந்தும் இனியும் அந்த வாய்ப்பைப் பெறக்கூடிய நம்பிக்கை உடையதுமான யு. என். பி. என்றழைக்கப்படும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வீழ்ச்சி ஏற்பட்டபோதெல்லாம் அதற்கு முண்டுகொடுத்து மீண்டும் கட்டியெழுப்பிய பெருமை திரு ஜே. ஆர் ஜயவர்த்தனாவையே சாரும். அரசியலில் நிறைந்த அனுபவமும் ஆற்றலும் நிறைந்தவர். கொள்கையில் அவருடன் வேறுபாடு கொண்டுள்ளவர்களும் கூட அவரது திறமையை மெச்சாமலில்லை. ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து அவர் விரைவில் விலகுவாரென்றும் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் அவர் சேரப்போகிறாரென்றும் சில மாதங்களாகவே பலத்த வதந்தி பரவியுள்ளது. 'பிரதமர் அழைத்தால் அரசாங்கத்தில் சேருவேன்' என்று திரு. ஜே. ஆர் ஒரு பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருந்ததைத் தொடர்ந்து அவர் பற்றி அதிகமாகச் செய்திகள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து திரு. ஜே. ஆர். விரைவில் வெளியேறுவார் என்று நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா சமீபத்தில் கூறியிருந்ததும் என்னதான் வேறுபாடிருந்தாலும் திரு. டட்லி சேனநாயகாவுக்கும் திரு. ஜே. ஆர் ஜயவர்த்தனாவுக்குமிடையில் கொள்கையில் வேறுபாடில்லை என்று வீடமைப்பு அமைச்சர் திரு. பீட்டர் கெனமன் சமீபத்தில் அபிப்பிராயம் தெரிவித்திருந்ததும் அரசியல் வட்டாரங்களில் சலசலப்பை ஏற்படுத்தியிருக்கின்றன. திரு. ஜே. ஆர். ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வெளியேறுவாரா என்பதும் அதிலிருந்து விலகி அவர் அரசாங்கத்தில் சேருவாரென்பதும் ஒருபுறமிருக்க சகல அரசியல் கட்சிகளையும் சேர்த்து தேசிய அரசாங்கம் அமைப்பதற்கான முயற்சி நடைபெற்றுவருகிறதென்றும் எச்சமயத்திலும் தேசிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்படக் கூடுமென்றும் ஒரு பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது. திரு. ஜே. ஆர் என்ன செய்யவிருக்கிறார் என்பதைப் பற்றிய சர்ச்சையை விடுத்து அவர் ஓர் ஆங்கில தினசரிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ள ஒரு கருத்து அரசியல்வாதிகளின் சிந்தனையை மட்டுமல்ல இந்த நாட்டு மக்கள் அனைவரினதுமே சிந்தனையைத் தூண்ட உதவ வேண்டும்.

இப்பொழுதுள்ள மோசமான நிலைமையை வைத்து அரசாங்கத்தைத் தொடர்ந்து கண்டிப்பதன் மூலம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு அதிகசெல்வாக்குப்பெற முடியும் என்று நினைப்பது கஷ்டப்படும் மக்களுக்குப்பெருந் தீங்கு செய்வதாகும் என்று திரு. ஜே. ஆர். கூறியிருக்கிறார்.

நமது நாடு சுதந்திரமடைந்து கால்நூற்றாண்டாகிறது. ஆனாலும் நாடு எந்த விதத்திலும் முன்னேற்றம் பெறவில்லை. கட்சி அரசியல் முறையே இதற்குப்பெரும் பாலும் காரணமாக இருந்துவந்திருக்கிறது. ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிபீடத்தில் அமர்ந்ததும் அதன் குறைகளை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் மற்றும் எதிர்க்கட்சிகளும் கண்டித்துமக்களின் அபிப்பிராயத்தை அந்த அரசாங்கத்துக்கு எதிராகத் தூண்டி வந்தன. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சிபீடத்துக்கு வந்ததும் ஐக்கிய தேசியக்கட்சியும் இதர எதிர்க்கட்சிகளும் இதையேதான் செய்தன. ஒரு கட்சி ஆட்சிக்கு வந்ததும் அது தவறுசெய்யவேண்டுமென எதிர்பார்த்திருந்து கண்டித்து அதன் மூலம் தாங்கள் அரசியல் ஆதாயம் பெறமுனைவது வழமையாகிவிட்டது. இதனால்தான் ஜனநாயக ஆட்சிமுறையின் மீதே மக்களுக்கு அதிருப்தியேற்படவும் தொடங்கியது. அடுத்த தேர்தலைப் பற்றியே கவலைப்படும் அரசியல்வாதிகள் நமது நாட்டில் மலிந்துவிட்டார்களே யொழிய அடுத்த சந்ததியைப்பற்றிக் கவலைப்படும் அரசியல் ஞானிகள் தோன்றவில்லை.

இச்சமயத்தில் திரு. ஜே. ஆர் தெரிவித்திருக்கும் கருத்து அரசியல் ஞானமுடையதாகத் தோன்றுகிறது.

பாதாளத்தில் வீழ்ந்தவன் அதற்கும் கீழே விழும் ஆபத்தில்லை. நமது நாடும் இன்று இந்த நிலையில் தானுள்ளது. ஜே. ஆர். என்னசெய்தாலும் சரி; மற்றவர்கள் என்ன செய்தாலும்சரி இனிநடைபெறவேண்டியது நல்லதாகத்தானிருக்கமுடியும்; நல்லதாகத்தானிருக்க வேண்டும்.

ஸ்ரீமா புதல்வி பாரிஸில் உயர் கல்வி

கொழும்பு, சனி

பிரதமரின் புதல்வி செல்வி சந்திரிகா பண்டாரநாயகா சார்போன் பல்கலைக்கழகத்தில் தொடர்ந்து படிப்பதற்காக பாரிஸுக்கு விமானத்தில் புறப்பட்டுப்போயிருக்கிறார். (நா)

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர்

— வண பிதா தாவீது அடிகள் —

(வண. பிதா ஞானப்பிரகாச சுவாமிகள் மறைந்த 25-வது ஆண்டு நிறைவை முன்னிட்டு இக்கட்டுரை வெளியாகிறது. இது வண. பிதா தாவீது அடிகள் 47-ம் ஆண்டு எழுதி ஆங்கில பாதுகாவலனில் வெளியான கட்டுரையின் மொழிபெயர்ப்பு சுருக்கம். மொழிபெயர்ப்பு: சம்புக்கலை செல்வத்துரை.)

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் நெருப்புக் காய்ச்சலினால் தாக்குண்டு 1947-ம் வருடம் தைத்திங்கள் 22-ம் நாள் மானிப்பாய் வைத்தியசாலையில் உயிர்பிரிந்து கடவுளடி சேர்ந்தார். தம் வாழ்வின்போது மொழிகளின் தோற்றம், மாற்றம், பேச்சுமுறை போன்ற துறைகளிலே ஆராய்ச்சிசெய்தார். அவருடைய பாரிய பணுவலின் முதற்பகுதி 1938-ல் வெளிவந்தது. இதன்பின் உலக யுத்தம் நடைபெற்றதினாலும், பணக்கஷ்டத்தினாலும் அச்சிடும் பொருட்களின் இறக்குமதி இன்னலாலும் அச்சக தாமதம் அதிகமானது. ஆகவே 1946-ம் ஆண்டில் 6-வது பகுதியே வெளிவந்தது.

சுவாமிகள் மானிப்பாயில் தமது கடைசியான 37-வது வேத போதக நிலையத்தை அடியிட்டு ஒரு சிறு கோவிலை நிறுவினார். 1946-ம் ஆண்டு முடிவில் மானிப்பாயில் சிற்றாலயத்தை அபிஷேகம் செய்து ஆனந்தமானார். யாழ்ப்பாணச் சாதாரண திருச்சபையின் சரிதையை ஆராய்ந்தார். இதைவிட சரித்திர ஆராய்ச்சியை நடாத்தி பழைய யாழ்ப்பாணம் எனும் நல்லூர் மேல் ஒளிவீழவிட்டார். யாழ் பாடி எனும் குருட்டுப் புலவனோடு தொடர்புசெய்த யாழ்ப்பாணம் எனும் கட்டுக்கதையைத் தகர்த்தெறிந்தார். அதுபற்றிப் [illegible] சரிதைகள், தமிழ்ச்செய்யுள்கள்போன்ற சரித்திர சாதனங்களெதிலும் பேசப்படவில்லை. யாப்ப, பட்டணமே யாழ்ப்பாணம் என்ற பெயர்கள் போர்த்துக்கீசர் காலத்திலேயே பாவனைக்கு வந்தன. இந்தச்சொல் நல்லூர் என்ற தமிழின் சிங்கள மொழிபெயர்ப்பே என்று சுவாமி ஞானப்பிரகாசர் சரியான ஆதாரங்களோடு சுட்டிக் காட்டினார். இன்னும் நல்லூரில் சங்கிலியன் மாளிகை முன்னர் ஒருவேளை மாளிகை இருந்த இடத்தில் ஒல்லாந்தர் நிறுவிய கட்டடம் என்று அத்தாட்சிப்படுத்தினார். அதோடு மூன்று சந்தூரம் வடக்கே உள்ள கோப்பாயில் சங்கிலியன் மாளிகையையும் கண்டுபிடித்தார். நாணய சாஸ்திரத்திற்கும் அவரது ஆராய்வு ஆக்கமளித்தது. தமது சொந்த இடைவிடா முயற்சியால் சேதுவெனும் சிறப்புப் பெயரும் பொறித்த விசேட நாணயங்களை நல்லூர் மன்னர் பாவித்தனரென்று காண்பித்தனர். மயில்வாகனப் புலவர் இயற்றிய 'யாழ்ப்பாண வைபவமாலை'யைப் படித்து அதன் பிழைகளைத் திருத்தி குறைகளை நிறைத்து 'யாழ்ப்பாண வைபவ விமர்சனம்' வெளியிட்டார். அவரது கூரிய புத்தி ஆழ்ந்த ஆராய்ச்சியின் பயனாக 'யாழ்ப்பாண மன்னர்' எனும் பாரிய வரலாற்று நூல் 1920-ல் முதன்முறை வெளிவந்தது.

சுவாமி ஞானப்பிரகாசர் பாஷைகள் படிப்பதிலேயும் கரிசனை காண்பித்தார். சரித்திர ஆராய்வுக்காகப் போர்த்துக்கேயம் படித்திருந்தார். அடுத்ததாக வடமொழியும் பாளியும் கற்கத் தொடங்கினார். சமஸ்கிருத சமயநூல்களிலே பயிற்சிபெற்ற பிராமணரே இருக்கு வேதத்திலே செறிந்திருக்கும் அடுஞ்செய்யுள்களின் விளக்கத்துக்கு அவருதவியை நாடுவாராயின் அவரது தேர்ச்சியை வியக்காதிருக்க முடியாது. வடமொழி இலக்கியத்தில் அவர் அதிக அக்கறை காட்டவில்லை. உபநிடதங்கள்முதல் வேதாந்தம் மட்டாகவுள்ள தத்துவ நூல்களிலேயே அவரது விசேட கவனம் சென்றது. பகவத்கீதையின் அழகான பதிப்பொன்று அவரிடமிருந்தது. ஒருநாள் அதிலிருந்து பலசுலோகங்களை மனப்பாடமாகவே சொல்லக் கூடியவராயினர். இவ்விதம் வடமொழிப் பயிற்சியின் பயன் அவரது தத்துவ வித்தகத்தென்னும் 'தத்துவ சைவம் அல்லது சைவசித்தாந்தம்' எனும் நூலாக 1947-ல் சபாரத்தின முதலியாருக்கு விடுத்த விடை

(5-ம் பக்கம் பார்க்க)

துதி செய்வோம்

— பண்டிதர் ஆசிநாதர்

இலங்கை ஈழத் திருநாட்டில்
இன்றமிழ் வளர்த்த பெரியாரைப்
பலவகை யானும் பாராட்டல்
பண்புள தமிழர் கடனாகும்
ஒல்லும் வகையில் உண்மையுடன்
ஒப்பில முறையிற் பணிசெய்த
வல்லோன் ஞானப் பிரகாச
வள்ளல் நினைவு தினமின்றே

சைவமுந் தமிழு முய்வதற்குச்
சாதனை செய்த நாவலர்போல்
தெய்வ மதமாம் கிறிஸ்தவமும்
தேன்தாய் மொழியாம் தமிழதுவும்
மெய்யாய் வளரப் பணிசெய்தார்
சுவாமி ஞானப் பிரகாசர்
துய்யோன் துறவோன் இவர்தம்மை
நினைவிற் கொண்டு துதித்திடுவோம்

சமயம் சமூகம் வரலாறு
சாதி தேசம் உற்பத்தி
அமையுந் தர்க்கம் ஆத்மீகம்
ஆகிய துறைகள் பலவற்றும்
அமைவாய் ஆய்வுகள் பலசெய்து
அறிஞர் எனவே சோபித்தார்
இமையவர் போன்றே இவ்வுலகில்
இலங்கி வாழ்ந்தார் இது மெய்யே

மொழிநூல் மதநூல் கலைநூலும்
வடஇனத் தர்க்க இசைநூலும்
வழிநூல் கதைநூல் பாநூலும்
வனிந்தே எடுத்த பழம்நூலும்
அழிவைப் புகழுறு ஒப்பியலும்
அருமொழி பெயர்ப்பு நன்னூலும்
அழுத்திப் பதித்தார் ஆயிரமாய்
அழியாச் சாதனை இதுவன்றே!

பிறநாட் டறிஞர் மதித்திட்டார்
பிறமொழிப் புலவர் வணித்திட்டார்
இறப்புச் சேவைச் செய்திட்டார்
சிந்தையில் உவப்பாய்த் துதித்திட்டார்
மறப்பே யின்றி முற்போத
முத்திரை நட்டனர் சேர்மனியர்
இறந்தும் இதுவரை என்செய்தோம்
இனியது செய்து சிறப்பிப்போம்

டொலர் மதிப்பிறக்கம் — தத்துவம்

வரலாறு—காரணங்கள்—விளைவுகள்
இவைபற்றி
வட்டுக்கோட்டை
யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர்
திரு சோ. அன்னியசிங்கம்
எழுதும்
கட்டுரைத் தொடர்
நாளை
'ஈழநாடு' வாரமலரில்
ஆரம்பமாகிறது..

மரண அறிவித்தல்

சுப்பிரமணியம் முத்தையா

உரும்பராய் இளைப்பாறிய ஆசிரியர் சுப்பிரமணியம் முத்தையா காலமானார். இவர் உரும்பராய் முன்னாள் உடையார் பொ. சுப்பிரமணியம் தங்கம்மா தம்பதிகளின் புத்திரரும் முன்னாள் உடையார் சு. நல்லைநாதன், சு. சின்னையா, திருமதி தில்லைநாயகம், திருமதி பரிமளம் ஆகியோரின் சகோதரரும் பென்சனர் ஆ. இளையதம்பி, முன்னாள் அதிபர் சு. குமாரசேகரம் என்போர்களின் மைத்துனரும் ஆவர். ஈமச்சடங்குகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் உரும்பராயில் நடைபெறும்.

3918

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1972-ம் ஆண்டு ஜனவரி மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.